சிவமயம்,

சவுடேஸ்பரி துணை,



ஸ்ரீராமேலிங்க

# சவுடேஸ்பரி பதிகம்.

இவை

சேலம் செவ்வாய்ப்பேட்டை, தா. க. காளப்ப
செட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க,

புதுக்கோட்டை ஸ்தலமென்று பேர்பெற்றோங்கிய
அள்ளாள நகர் மநுர்குல தேவாங்க குலதிலக
பட்டக்கார தம்மண்ண செட்டியார் குமாரன்,

சஞ்சிவி செட்டியார் இயற்றியதை,

...ப்பேட்டை செந்தமிழ்ச் சங்கக்காரியதரிசி
...ராய செட்டியாரால் பார்வையிடப்பட்டு
...ம் பட்டக்கார் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

Q25:417
N22
183514

உ

சவுண்டேஸ்வரி அம்மன் துணை.

894.8111
2775

## சாற்றுக்கவிகள்.

சேவ்வாய்ப்பேட்டை சேந்தமிழ்ச்சங்கம் காரியதரிசி,
T. சுப்பராய செட்டியார் இயற்றியது.

கலைச்சுடைய தேவாங்கர் கள்ளமிலா உள்ளம்
நிலைத்த சவுடாம்பிகையா நேசக்—குலக்கொடியை
பண்ணமைந்த பாவால் பாடிப் புகழ்கொண்டான்
திண்ணியனுஞ் சஞ்சீவி தேர்ந்து.

இஃது
செவ்வாய்ப்பேட்டை மநுர்குலதேவாங்க வாசகசாலை டைரெக்டர்
P. S. திருமலைய செட்டியாரவர்க ளியற்றியது.

## வெண்பா.

சீர்வளருந் தூண்டு நகர் தேவிசவுடாம்பிகைமேல்
பேர்வளர ஓர்பதிகம் பேசினு—னேர்வளரும்
அல்லாள நன்னகரோன் அன்புமிகு தேவகுல
வல்லாளன் சஞ்சீவி வந்து.

தம்மண்ண செட்டியவர் தன்றனையன் மன்னுகலை
செம்மனத்தோடே யியற்றுந் தேர்ச்சியுளான்—இம்
[மண்ணின்
வாழ்க்கையது பொய்யென்ற வத்துவித வாழ்வுடையன்
ஆழ்ந்துரைத்த நற்கவியை யாய்.

Q25:417
N22

## கணபதிதுணை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஓரானை முகத்தானை யும்பர்தொழும் பதத்தானை
யுலகமுய்யக்
காரானை முகத்தானைக் கருணை யொடுங்கோடேவி
கடத்திட்டானை
நீருயும் நெருப்பான நிறத்தானைத் தந்தையென
நினைத்திட்டானை
ஆறான சஷ்டியானை [illegible] துடைப்பானை
யடைந்துய்வாமால்.

நூலகம்
183514

அவையடக்கம்.

## வெண்பா.

வெண்டாமரை முன்னோர் விமணைருங்கம் பூத்ததைப்போல்
பண்டாய பாவலர்முன் பாடலுற்றேன்—பண்டாராப்
புன் சொலையும் பார்த்துப்புறங்கூறு தேற்றதோ
ரின் சொலெனக் கொள்வீ ரிசைந்து.

## நூல்.

பதினான்கு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

(1) திருமாது கலைமாது புவிமாது நடமாடுந்
தெளிமதுரை பாண்டி நாட்டைச்
சேர்ந்த மருகாவனத்தூண்டு கோலெனுநகரில்
தேவாங்கர் செய்ததவமாய்
வருமாதி பறையென்னு மொருசத்தியுருவாகி
வந்திலகு சவுடேஸ்வரி
வஞ்சமிகு ராக்கதரை வீட்டியத்தேவலன்
வருந்தாம லாண்டமணியே
மருவாருங்கொன்றைமுடி மாதேவனார்தமை
வலமாக வைத்தபதியே
மங்கள சுமங்கள விதங்கபணி துங்கமணி
வரர்க் குங்குமத் தாயகி
தருவாருந்துண்டு கோலெனுநகரில் தேவாங்கர்
தன்குலத்தேயுதித்த
தாரணியளந்ததோர் வாமனன்றங்கையே
தாயிசவுடாம்பி யுமையே.

(2) செந்தமிழ்க்கவிபாடி சேவிக்கலாமெனில்
சிறிய நானுணர்ந்து மில்லன்
சிற்றறிஞன் கற்றவரிடத்து மேகாமலே
சேயநான் கோழை மதியன்
அந்தமிகு முந்தனைச்சிந்தனைச் செய்யும்வகை
யறிகிலேனெந்த விதமும்
ஆயியெந்தனைபெற்ற தாயேயிச்சேயனை
ஆளவேவேண்டி நின்றேன்
பந்தமெனுமாபாசம் வந்தவழியேயோட
பதமலர்த் தந்தருளுவாய்
பாவியானிப்புவியில் சேவியா தடியரை

பாழாக்கினே னென்காலம்
மந்தார கூவிளந்தரு வோங்கு தூண்டுகோல்
மாநகருதித்த பதியே
மச்சயாய் வந்ததோ ரச்சுதனறங்கையே
வாலைசவுடாம்பி உமையே.

(3) திருவருளினாலிச் சகந்தனிலடியனேன்
செனனம் வீணாகாமலே
சிறுவனை நின்னடிமை யருமையாய்க் கொண்டிடாய்
ஸ்ரீமஹா ராஜேஸ்வரி
அருள்பெருகி யுந்தனை யன்பாய் துதித்திட
வடிமைக் கறிவுதவுவாய்
ஆதியே நீதியே சோதியே வானவர்க
ளபிமானங் காத்தநிதியே
கருவளரு மின்னமொரு செனனம்புகாமலே
கடையேனை காத்தருளுவாய்
காசினியில் நேசமாய் தாசானுதாசர்கள்
கண்டு ஆனந்தமடைய
இருளொளிரு மிப்பிறவிதனை நீத்தவன்பர்சூழ்
இனிய நகர் தூண்டுகோல் வாழ்
இரணியனை மார்பீரும் அரியின்திருத்தங்கையே
இனிய சவுடாம்பி உமையே.

(4) திக்குவிஜயம் செய்து சேயர்க்கு அங்கங்கு
தெரிசனந்தந்து மவர்கள்
செய்ய பக்துவமறிந்துய்யும் படிக்கருணை
செய்கின்ற திருநாரணி
தக்கவன்போடுனைத் தவமது விபற்றுரார்
தாயினாளென்று மறியேன்
தண்டாமரைத் திருவடிக் கெனையாளாக்கி
தாயே நல்லருளொடின்னம்
மிக்கவாய்மையோர்க்கு மென்மேலு மோங்கிட
மேதினியிலருள் புரிகுவாய்
மேல்வளரும் விண்ணோர்க்கு நல்லமுதை யீந்ததோர்
வஞ்சை வித்தகி நாயகி
தக்கபரிபக்குவர்க்காய் தூணில்வந்ததோர்
தாமோதரன் றங்கையே
தரணிபுகழ் தூண்டுகோலெனு நகர மர்ந்திடுந்
தாயிசவுடாம்பி உமையே.

(5) சண்டவுடனேடுனை சலங்குதே பேய்பில்லி
காரணமேதோ வறிகிலேன்
சருணைக்சணு லெனையரன்றேவியே பார்த்து
சசடறக் காத்தருளுவாய்
தொண்டர்களடிபணிந் தெண்டிசை புகழுமே
தொல்லுல கிலவதரித்தாய்
சுத்தநிர்குணரூபி சத்துவப்பிரதாபி
சுயம்புவே மெய்மை வடிவே
அண்டர்கள் தொழுகின்ற சண்டப்பிரசண்டியே
ஆதியே யனாதிபதியே
அகிலமதி லுன்மகிமை யாரறியப்போகுவ
அருள் தருங்கற்ப தருவே
தண்டா மரைத்திருவும் வெண்டா மரைத்திருவும்
தான் சூழுந்தூண்டுகோல் வாழ்
சதுமுகன் றனையீன்ற முதுமாலின் றங்கையே
தாயி சவுடாம்பி உமையே.

(6) பார்க்கவியே யுந்தனைப் பணிகின்ற பக்தர்க்கு
பாரிலொரு குறைவுமுண்டோ
பணியாதபேர்களுக் சணிய துணிஇல்லாமல்
பாவியாய் பரதவிப்பார்
ஏற்கவே நின்னடியார் சேர்க்கையில்லாதயான்
எப்படிக் கடந்துய்வனோ
எளியேனை சுளுவாயோர் பழுதுவாராமல்பே
ரின்பசுக மூட்டிவைப்பாய்
மூர்க்சனாய் சண்டாளருறவினால் மதிகெட்டு
முழுமூடனாகி விட்டேன்
முற்றிலு மெந்தனைச் சற்றேமாறுமலிம்
மூடனைக் காத்தருளுவாய்
மாக்கனி பலாக் கதலி தேனாரும்வாழைவயல்
மாநகர் தூண்டுசோல் வாழ்
மாசிலா கேசவன் தங்கையே மோனநிறை
வளருஞ்சவுடாம்பி உமையே.

(7) ஞான சத்தியே யுனது மோனமுத்தியை எற்கு
ஞாலமதிற்றந் தருளுவாய்
ஞாயிறுவுதித்திட்ட தாயகம் போலமெய்
ஞானம் விளங்கச் செய்வாய்
தானமும் தர்மமும் தாழ்ந்து வந்தோர்கட்கு
தயவோடு மீந்து மறியேன்

தமியேனை எவ்வண்ணமுமையே நின்றாட்களிற்
றான் சேர்த்துக் கொள்வாயம்மா
போனது போக இனிமேலாகிலும் தயவு
புண்ய மோங்கிடச் செய்குவாய்
பொற்கமல நற்பத மற்பனுக்குத்தந்து
புகழ்பெருக அகமகிழுவாய்
தான மெண்ணான்கினொடு ஞானந்தழைத்திலகு
தரணிபுகழ் தூண்டுகோல் வாழ்
தாமோதரன் தனது நேயமிகு தங்கையே
தாயி சவுடாம்பி உமையே.

(8) அம்புவியிலுந்தனைக் கொண்டாடு மருமையும்
அபிஷேகம் செய்யு முறையும்
ஆதிசேஷன் புகழ்ந் தாலுமாகாதெனில்
அடியனொரு நாவினாமோ
நம்மவர் குலத்துக்கு நல்லொழுக்கப்வர
நாவினாலாசீர் வதிப்பாய்
நாராயணி வேதபாராயணி எங்கும்
நடுநின்ற பரிபூரணி
இம்மா நிலத்திலெனை ஈன்றிட்டவன்னையே
யான்படும் இம்சை வறுமை
இனியாரெடுத் துரைத்தோதிடவேணுமோ
ஈஸ்வரி நீ யறியாததோ
வம்புசெறி தும்பையணி சம்புவைநம்புவோர்
வாழுநகர் தூண்டுகோல் வாழ்
வளருமருள் நாரணன்றங்கையே யெனையாள
வந்த சவுடாம்பி உமையே

(9) சிங்கவாகன மீதிலேறியே அவுணரை
ஜெயங்கொண்ட திருசூலி நீ
சிற்றறிவனுற்ற துயர் நற்றமிழைபாடவே
சீறிப்பறந்தோடப்பார்
அங்கமீது மதுடைய தங்க காமதை வைத்து
ஆசீர்வதித் தருளுவீர்
அரியவுன திருகழலை யுருகி துதிசெய்யாத
அரும்பிழை பொறுத்தாளுவாய்
குங்குமம் மட்டிப்பால் சாம்பிராணி[illegible]டைகள்
கோ[illegible]யின் பூஜையில்
குமுகுமெ[illegible]வருகுதே கொண்டாடுமடியார்க்கு
கொள்ளுதே யருளுமருளும்

183514

திங்கள் முகலங்கர்த விளங்குமணி மாடமமர்
தெய்வநகர் தூண்டுகோல்வாழ்
ஸ்ரீஹரி கேசவன் நேசமுள தங்கையே
தேவி சவுடாம்பி உமையே.

(10) அரனுடனே கயிலையி லமர்ந்திட்ட வன்னை நீ
வம்புவியி லவதரித்த
ஆனந்த மென்னமோ வருள் செப்பலாகாதோ
அரஹர மஹாதேவி நீ
நரர்களுக் கருண்ஞான மீபவோ கருணைமழை
நான்றிகிலேன் பெய்யவோ
நாரணிக்காரணி ஆரணம் புகழ்கின்ற
நாதாந்த பரிபூரணி
சிரமது வணங்கியே சேவிக்கு மடியார்க்கு
சீர்திகழ் பாதமலரின்
தீர்த்தமது தந்தவரை காத்தவர்கள் தொந்தவினை
தீர்க்கு நின்மகிமை யெளிதோ
திறமிகுமல்லாள நகர் புதுக்கோட்டையைச்
சேர்ந்தப் பட்டப் புனிதனும்
செல்வதநு மண்ணன்றரு சஞ்சீவி யெனையாளும்
தேவி சவுடாம்பி உமையே.

## வாழி.

நீராருஞ் செஞ்சடைசேர் கண்ணுதலோ னிதம் வாழ்க
நேயமிக்க
போராருஞ்சீர் சவுட நாயகியின் பெட்புமிகு
பெயரும் வாழ்க
காராருந்தூண்டி கோலெனு நகரும் வானவரும்
களமுற்றோங்கும்
ஏராருந் தமிழ்ப்புலவர் பல்லாண்டு பல்லாண்டா
யிருக்கவாழி.

கொஞ்சம் பேசுமகனே எந்தன் நெஞ்சம் பத்துதே என்றவர்ண மெட்டு

இராகம். தாளம்.

## பல்லவி.

தாயே சவுடம்மா எந்தன்—சஞ்சலம் தீர்ப்பாய்—தாயே

## அநுபல்லவி.

அம்மா—நீயேகதியென்று—நினைக்கும் தொண்டர்க்கருளும்
ஓம்சிதியே பரகதியே எந்தன்மதியே போற்றினேன் தாயே

பத்தாயிரம் குலத்தை பாதுகார்க் கின்றவளே
ஓம்பரமே எந்தன்கரமே நிறைய
வரமேதருவாய்—தாயே.

சலுவையுடன் கங்கையை சடையில்வைத்தோன் தேவியே
ஓம் ஜாதி தேவாங்கர்க் காதியாகிய சோதிநீதியே—தாயே
பாலன்சஞ்சீவி என்போன் பாடினேன்றமிழினல்
பார்த்து என்றுயர்தீர்த்து நன்றுய் காத்தருளுவீர் தாயே.

## கீர்த்தனம்.

ராம நாமம் செய்ஜன்மம் என்ற வர்ணமேட்டு.

நாராயணியேநான் நம்பினேன் தாயே நலம்செய்வாய் நீயே
பாரோர்புகழ்எங்கும் பராபரமானவளே காரும்கருணாகரகுவி

அருள்தா கபாலி நாராயணியே
திருக்கண்ணன் மங்கையே திருமாலின்றங்கையே

உருக்கமுடனெந்தனை யருட்கண்ணால்பாராய் சுருக்கா நீ
வாராய் நாராயணியே

தூண்டுகோலெனும் ஊரில்வேண்டினுயோ பிறக்க
ஆண்டவனே உம்மையனுப்பி வைத்தாரோ
அதனுல் வந்தீரோ நாராயணியே

ஆவாங்கமா யோங்கும் தேவாங்கர்குலமணி
பாவங்கள் வராமல் பாலனைக்காராய் சஞ்சீவியை நேராய்
தாயே நீதனயனுக்கருள் தருவாய்
சவுடம்மாதாயே நீதனயனுக்கருள் தருவாய்.

## அநுபல்லவி.

நாயேன்றனக்கு இந்தமாயை வந்தணுகாமல்
சேயேனை யாதரிப்பாய் நேயமுடனே பெற்ற—தாயே.

## சரணம்.

தேவாங்கர் குல சிகாமணி விளக்கே நின்
அவாங்கோசரமதை தவாங்க முடையோர்கள்
பவாங்கமதைப் போக்கி சிவாங்க மாயறிவார்—தாயே.

சத்துசித்தானந்தமே தயாபரமே தன்மயானந்த மோனமே
நித்தியநிர்மல நிராங்கார
வஸ்துவே முத்திபளித்திடு நத்தி னேன் சத்தியே

சஞ்சீவி எனுமிந்த குளவிமீது தயவுவைத்து
சஞ்சித கர்மமெலாம் தீர்த்து பஞ்சைக்குநின்னுடைய பாதார
விந்தமதை
பண்ணவர் விண்ணவர் மன்னவர்ப் புகழத்தா—தாயே.

---

(அம்பலவாணன் மனோஹரி என்ற மெட்டு.)

தாயே சவுடேஸ்பரி தர்ப்பரன் சகோதரி தமியேனை வந்தாதரி
ஆயனுன அண்ணன் மாயன் கபட சூஸ்திரம்
தாயே வுனக்கும் தெரியாதா என்மேல் வாதா—தாயே.

அன்றுமா லிடப்சென்று கொண்டுநூல் வரும்போது அவுணர்
வந்துன்மேல் மோத.

நின்று அவர்கள்தம்மை கொன்று சம்ஹாரம்செய்து
நன்றெனவரனவர்மாணுபி மானம்தனைக் காத்தாய்—தாயே.

இன்னமூதாக என்சொல் ஏற்றுக்கொள்வாயம்மா
யானென்ன சொல்வேன் சும்மா
அன்னைமனதுபித்து அடிமைமனது சித்தென்
ருகமம்ஓது வதுவும்பொய்யா மெய்யா—தாயே.

நாயினும் கடையேனை நாரணியே கண்பார்
நானிலம் தனில்திக்கு யார்

சேயன் சஞ்சீவி யென்போன் செப்பினேன் றமிழினுல்
ஆயன் சகோதரியே அடியேனை யாதரியே—தாயே.

காமமழியச்செய்யவா லோகேசா வுன் என்ற வர்ண மெட்டு.

இராகம் ஆரபி.] அடதாளம் பின்முடுகு

பல்லவி.

கிருஷ்ணன் சகோதரியே தேவாங்கர் குல
இஷ்டபரா பரியே

அநுபல்லவி.

அஷ்டாக்ஷர மந்திரமதை ஆரனுமக்
கோதவிலலையா ஆதியே
பரஞ்சோதியே இந்த பேதை யானென்ன
வாதியா சொல்லாய் (கிருஷ்ண)

## சரணம்.

இந்த மாய்கைவந்
துசெய்யுதம்மா
அந்த மெனக்குச்
சிந்தனை செய்யாமலே நீ
யாயிருந்தால் சிறுவ
னறிய நற்பதவி
ருவதருமை யல்லவோ
கொஞ்சமேனுமுன்மனது
அஞ்சலிசெய்திடு
ஆதரியா தென்ன
சஞ்சிவியை ஆண்டாலன்றோ
யிலுன்மகிமை தாயே
சேயனையாதரிப்பாய்
பாயலுடனே

தெந்தனை தொந்திர
வந்தவழியா யோட
சொல்லம்மா
உந்தன்வழி
னுன்னுடைய
பெருமையாய்ச்சே
(கிருஷ்)
குழவி மேலில்லையம்மா
மென்னை
அன்னை
தாணி
விளங்குமிந்த
நேயமுடனேபெற்ற
உற்ற (கிருஷ்)

இராகம். தாளம்.

## பல்லவி.

உந்தன் மகிமையை எந்தனாலெடுத்து
உரைக்கப்போமோ அம்மா.

## அநுபல்லவி.

நந்த கோவிந்த முகுந்தன் சகோதரியே
எந்தனை யாண்டிடு வந்தனம் செய்கின்றேன் (உந்தன்)

கயிலையி லல்லோ நீ யிருப்பதென்று
கதைகள் சொல்லுகின்றதே இந்த
அகிலமதில் வந்த அன்பது என்னமோ
ஆதி பரஞ் சோதியே ஓதிடாய் நீயே (உந்தன் மகிமை)
சஞ்சீவி நின்பாலன் சாற்றுங் கவிதன்னை
தாயே ஏற்று உந்தன் பஞ்சாக்ஷரமதை
பக்தனுக்குத்தந்து நெஞ்சம் குளிர்ந்திட
செய் அஞ்சலி செய்கின்றேன் (தாயே உந்தன்.)

முற்றிற்று.

183514